(v) திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்வி பற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கை

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் மீதான உரிமைப் பிரச்சினைபற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கையை பேரவைமுன் அளிக்கிறேன்.

9. அவையுரிமைத் தீர்மானம்.

திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்வி பற்றிய அவையுரிமைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றல்

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. டி. மார்டின் மீதான அவையுரிமைக் கேள்விபற்றிய அவையுரிமைக் குழுவின் தாற்காலிக அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, "முன்மொழியப்பட்டுள்ள தீர்மானத்தில் கண்டுள்ள பரிந்துரைகளை இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பரிந்துரைகளை பேரவை ஏற்றுக்கொண்டது.

10. அறிவிப்புகள்.

(i) அலுவல் ஆய்வுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1) விதியின்கீழ் 1968-69-க்கு பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர் . . . (தலைவர்)
2. மாண்புமிகு முதலமைச்சர்.
3. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
4. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி.
5. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
6. மாண்புமிகு திரு. செ. மாதவன்.
7. புலவர் கா. கோவிந்தன்.
8. திரு. து. ப. அழகமுத்து.
9. திரு. பி. ஜி. கருத்திருமன்.
10. திரு. பி. கே. மூக்கையா தேவர்.